அ.வ.எண்: 84/2023 நாள்: 20.02.2026

பி.வா.சா.1 –

பூங்கோதை

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்த நிருபன வாக்குமூலத்திற்கான விபரங்கள் மற்றும் எதிர்வழக்குரைக்கான விபரங்களை யார் கூறியது என்றால் நான்தான் கூறினேன். நானும் வாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும் சொன்னால் சரிதான். வாதிகள் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பாதையாக பயன்படுத்த இடம் கேட்டு வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா ஒன்றாம் இலக்க சொத்து இரண்டாம் வாதியின் பெயரில் 2003 ஆம் ஆண்டு கிரயம் பெற்று அதில் அவர் வசித்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதிகளின் வீட்டிற்கு மேற்கு திசையிலும் கிழக்கு திசையிலும் எனக்கு பாத்தியப்பட்ட இடம் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட இடங்களின் சர்வே எண் 411/4,6,7,8 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்கள்

அனைத்தும் ஒரே நாளில் ஒரே குடும்பத்தை சேர்ந்த எங்களுக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்களுக்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சர்வே எண் 411/4 ராஜேந்திரன் பெயரில் உள்ளது, சர்வே எண் 411/6 முத்து பெயரில் உள்ளது, சர்வே எண் 411/7 பாக்கியம் பெயரில் உள்ளது மற்றும் சர்வே எண் 411/8 எனது பெயரில் உள்ளது,

2. என் பெயரில் பெறப்பட்ட பட்டாக்கள் அனைத்தும் மோசடியானவை என்று வாதிகளால் என் மீது வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனு விசாரிக்கப்பட்டு வாதிகளுக்கு சாதகமாக உத்தரவு அளிக்கப்பட்டது குறித்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வருவாய் கோட்டாட்சியரின் ஆணையை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் திருமணத்திற்கு பிறகு தான் தாவா சொத்து அமைந்துள்ள மித்ரா வயல் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே சுமார் 60 வருடங்களாக தாவா இரண்டாம் இலக்க சொத்தில் தான் வாதிகள் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3. வாதிகளின் சொத்திற்கு வருவாய் துறை ஆவணங்களின்படி நேரடியாக பாதை இல்லாததால் வசதியுரிமை கேட்டு வழக்கு தாக்கல்

செய்துள்ளதால் நான் அவர்களுக்கு பாதை வழங்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தங்கள் வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் சர்வே எண் 411/4,6,7,8 வழியாகத்தான் செல்ல வேண்டும் வேறு மாற்று பாதை இல்லை என்று சொன்னால் சரியல்ல சர்வே எண் 411/5 மாற்றுப் பாதை உள்ளது. தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து பார்த்தால் பாதை உள்ளதா இல்லையா என்ற உண்மை நிலவரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான் .

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.20 17:10:44 +0530